செய்தி குறிப்பு எண்:121 நாள்:23.11.2008

# அருந்ததியர் சமுதாயத்தினருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கிட தமிழக அரசின் சட்டரீதியான ஏற்பாடுகள்!

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

## 23.11.2008

மனித மலத்தைக் கைகளால் அள்ளி, தலையால் சுமந்தும்; கழிவுநீருக்குள் மூச்சடக்கி மூழ்கியும்; குப்பை கூளங்களை அகற்றி சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்தியும்; தாழ்த்தப்பட்டோருள் மிகவும் தாழ்த்தப்பட்டோராய் – கடைசிப் பிரிவினருள் கடைக்கோடிப் பிரிவினராய் வாழ்ந்து வரும் அருந்ததியர் வகுப்பினரின், "முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக்கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்கு தனி உள்ஒதுக்கீடு வழங்குவது பற்றி, அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது" என்று 23.1.2008 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, 12.3.2008 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தில், "சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்குள்ளேயே அருந்ததியர் எனப்படுவோர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அவர்களைக் கைதூக்கிவிடும் முயற்சிகளில் ஒன்றாக, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்கிட, அரசுக்குப் பரிந்துரை செய்ய உயர்நீதிமன்றத்திலிருந்து ஒய்வு பெற்ற நீதியரசரைக் கொண்ட ஒரு நபர் குழு அமைப்பதென்றும்; அந்தக் குழுவின் அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் பெற்று அதை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு முடிவெடுப்பதென்றும்" தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், அருந்ததியர் சமுதாயத்தினருக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு.எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு 25.3.2008 அன்று அமைக்கப்பட்டது.

நீதியரசர் திரு.எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள், அருந்ததியர்க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான அனைத்துப் பரிமாணங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்து; அருந்ததியர் எனப்படுவோருள் அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதி ஆந்திரர், பகடை, மடிகா, தோட்டி ஆகிய பிரிவினரையும் உள்ளடக்கி; அவர்களின் மொத்த மக்கள் தொகை அடிப்படையில்; ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பதினெட்டு சதவீத இடஒதுக்கீட்டில் – மூன்று சதவீத உள்ஒதுக்கீட்டினை வழங்கலாம் என்று பரிந்துரை செய்து; அறிக்கை ஒன்றினை நேற்றைய தினம் (22.11.2008) தமிழக அரசிடம் அளித்துள்ளார்.

அருந்ததியர் சமுதாயத்தினருக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற இந்தப் பரிந்துரை அறிக்கையைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்காக 27.11.2008 வியாழக்கிழமையன்று தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் அடிப்படையில், அருந்ததியர் சமுதாயத்தினருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்குவதற்குச் சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அருந்ததியர் சமுதாயத்தினர் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்து வாழ்வாதாரங்களை வலுப்படுத்தி – வளப்படுத்திக் கொள்வதற்காக; அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் கழக அரசு; கருவில் இருக்கும் காலம் முதல் கடைசிக் காலம் வரை வாழ்க்கையின் அனைத்துக் கட்டங்களிலும் அரசின் நிதியுதவி பெற்று அவர்கள் நிம்மதியாக இருப்பதற்குத் துப்புரவுப் பணியாளர்கள் நல வாரியம், காலணி, தோல் பொருள்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் என நலவாரியங்களைத் தோற்றுவித்து பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெற வழிவகுத்து அளித்துள்ளது. அவற்றின் தொடர்ச்சியாக, அவர்களுக்கு வழங்கப்படவுள்ள – இந்தியாவிலேயே முன்னோடியானதும், வரலாற்றுச் சிறப்புள்ளதுமான – தனி இடஒதுக்கீடு எனும் நடவடிக்கையின் காரணமாக சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ வழி பிறந்துள்ளது.

*****

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.